DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | பெருமாள் | Village | வெங்கட்ராஜபுரம் |
| Father's Name | கோவிந்தசாமி | Taluk | வாணியம்பாடி |
| Age | 54 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **26.03.2026**

**O.S. No. 8/2021** **வா.சா.1** **03.05 PM – 03.48 PM**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

1. பிரதிவாதிகள் என்னுடைய வீட்டின் ஒரு புறம் பூசக்கூடாது என தடுத்து நிறுத்தியதற்கு காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. எந்த தேதியில் புகார் அளிக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புகார் அளித்ததற்கு காவல் நிலையத்தில் கொடுக்கப்படும் CSR நம்பர் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளலாமா என்றால் இல்லை.

2. நான் அளித்த புகாரின் பேரில் காவல் நிலையத்தில் இரு தரப்பினரையும் அனைத்து விசாரித்தார்களா என்றால் ஆம் விசாரித்தார்கள். மேற்படி விசாரணையின் போது நாங்கள் இருவரும் எழுதிக் கொடுத்ததாக கூறப்படும் ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் என் சொத்திற்கு சம்பந்தப்பட்டது தான் என்றாலும் சந்து வழி குறித்தோ பிரதிவாதிகளின் பெயரில் உள்ள சொத்தை குறித்தோ எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் கட்டியிருக்கும் வீட்டை கட்டுவதற்கு முன்பு நில அளவையர் வைத்து அளந்து பார்த்த பின்பு கட்டப்பட்டது என்றால் இல்லை. அதனால் தான் என் சொத்தில் அளவு எனக்கு சரியாக தெரியாமல் பிரதிவாதியின் சொத்தில் வீடு கட்டி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. என் சொத்து இருக்கு மேற்கு புறமாக இருக்கும் நிலங்கள் அனைத்தும் அரசு புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். பின்விருக்கும் அரசு புறம்போக்கு சொத்தில் தான் செட் வைத்து என் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அரசு புறம்போக்கு நிலத்தில் இருக்கும் புளிய மரத்தையும் நான் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான் பட்டா வாங்கி நான் அனுபவித்து வருகிறேன். மேற்படி பட்டாவும் என்னுடைய மகள் சர்வேயராக அலுவலகத்தில் வேலை செய்வதால் அதை பயன்படுத்தி போலியாக நான் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.

5. இந்த வழக்கின் பிரதிவாதிகளை தவிர வேறு எந்த நபர்கள் மீது வழக்கு தொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி ரமேஷ் என்பவர் மீது வேறொரு வழக்கில் என்ன பரிகாரம்கோரி தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் என் சொத்திற்கு பின்புறம் உள்ள பொறம்போக்கு வழி ஆக்கிரமிப்பு செய்து கொட்டாய் போட்டு உள்ளதால் அதை அகற்றுவதற்காக வழக்கத்தாக செய்துள்ளேன். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியவில்லை. மேற்படி கொட்டாய் அமைத்து எத்தனை வருடம் ஆகிறது என்றால் சுமார் ஆறு வருடம் இருக்கும். இந்த வழக்கை தாக்கல் செய்யும் சமயம் ஒன்றாம் பிரதிவாதி மேற்படி நான் கூறும்படி கொட்டாய் போட்ட விவரம் தெரியும் என்றால் தெரியும். அந்த விவரத்தை இந்த வழக்கில் ஏன் தெரிவிக்கவில்லை என்றால் அது வேறு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளார் இதில் தெரிவிக்கவில்லை.

6. மேற்படி நான் கூறும் வழி பாதையில் தான் நான் இன்றைய தேதி வரை சென்று வருகிறேன் என்று சொன்னால் இல்லை. வேறு எந்த வழியில் நான் சென்று வருகிறேன் என்றால் என் சொத்திற்கு கிழக்கு புறம் சென்று வருகிறேன். மேற்படி வழி குறித்த பரிகாரம் கோரி அசல் வழக்கு எண். 55/2025 தாக்கல் செய்துள்ளேன் இரண்டு வழக்கும் ஒரே பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இரண்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

7. அசல் வழக்கு எண். 55/2025 வழக்கானதும் இதே சர்வே எண் மற்றும் இதே பிரதிவாதிக்கு எதிராக தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் வீட்டிற்கு அருகே சித்ரா என்ற நபர் மீதும் இதே நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழியை ஆக்கிரமிக்க கூடாது என

தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சித்ரா ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறப்படும் வழியின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் 3/19 ஆகும். சர்வே எண்.3/19 யார் பெயரில் உள்ளது என்று சொன்னால் சாட்சி அதற்கு எனது தந்தை பெயரில் ரசீது உள்ளது என கூறுகிறார்.

8. எனது தந்தை கோவிந்தசாமி பெயரில் உள்ள எந்த பட்டாவையும் மூன்று வழக்கிலும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் என் தந்தை பெயரில் பட்டா ஏதும் இருந்ததாக நான் கூறவில்லை, கட்டணம் செலுத்தியதற்காக ரசீது தான் உள்ளது. மேற்படி என் தந்தை பெயரில் உள்ள ரசீதுகள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

9. பிரதிவாதிகள் எந்த காலத்திலும் என் சுவற்றில் பூசு வேலை செய்வதை தடுக்கவில்லை என்றாலும் அவர்களுக்கு வீண் தொல்லை கொடுக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக நான் அவ்வாறு கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த ஒரு கோரிக்கையும் இல்லாமல் தான் தாக்கல் செய்து உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் எனது அக்கம் பக்கத்தில் வசிக்கும் நபர்கள் மீது காவல் நிலையத்தில் பொய்யாக புகார் அளித்தும் வழக்கு தாக்கல் செய்தும் வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

10. வாணியம்பாடி குற்றவியல் நீதிமன்றத்தில் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தான் பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுத்ததால் காவல்துறையினர் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தங்களுடைய ஓலை குடிசையை அகற்றி வீடு கட்டுவதை தடுக்க வேண்டும் என கெட்ட நோக்கத்துடன் தான் என்னுடைய வீட்டில் ஒருபுறம் பூசுவேலை செய்யவிடுவதில்லை என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. இந்த வழக்கானது எந்த சொத்து குறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் 3/17 குறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்த சர்வே எண் குறித்து

இடைக்கால தடை உத்தரவு கட்டளை நான் பெற்று இருக்கிறேன் என்று சொன்னால் சர்வே எண் 3/17 குறித்து தான். இந்த வழக்கில் சர்வே எண் 3/10 குறித்து எந்த இடைக்கால தடை உத்தரவு இல்லை என்றால் ஆமாம். வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.3/16 ஆகும். இந்த வழக்கில் மேற்படி சர்வே எண்.3/16 குறித்து எந்த ஒரு இடைக்கால தடை உத்தரவை பெற்றிருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கில் ஒன்றாம் பிரதிவாதி மேற்படி சர்வே எண் 3/16 ல் தான் வீடு கட்டி உள்ளார் என்றால் ஆமாம். சர்வே எண் 3/17 லில் 1ம் பிரதிவாதி எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் இதர சர்வே எண்கள் குறிப்பிட்டு இதே வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்து இதே பரிகாரம் கோரப்படுவதால் இரண்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.